## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 93/2018 |
| Deposition of witness for | Prosecution wit. PW.4 |
| Name | இராமசாமி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 30-12-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது செக்காரகுடியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆறுமுக மங்களத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது கடந்த 04.12.2016 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு வசூலுக்காக நானும் தலையாரி சுயம்பு என்பவரும் ஏரல் காந்தி சிலைக்கு அருகில் நின்று கொண்டு இருந்தோம்.

2. அப்போது பஸ்சுக்காக ஏறும் ஒரு பெண் மணியிடம் இருந்து 8 பவுன் தங்க செயினை எதிரி டேவிட் என்பவர் திருடியதாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை கொடுத்தார் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஏரல் காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்டது.

3. அதில் நான் மற்றும் தலையாரி சுயம்பு இருவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் அந்த ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள 1 வது

கையொப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ 5** ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ரூ. 80000 க்கு தங்க செயினை விற்பனை செய்ததாக சொன்னார்.

4. பின்னர் அவரிடம் இருந்து ரூ. 80000 த்தை அத்தாட்சி மகஜர் வாயிலாக கைப்பற்றப்ட்டது. அத்தாட்சி மகஜரில் உள் 1வது கையொப்பம் **அ.சா.ஆ. 6** ஆகும். எதிரியை எனக்கு அடையாளம் தெரியும்.

குறுக்கு விசாரணை

5. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் எதிரி யார் என்று கேட்டபோது டேவிட் என்று சொன்னார். ( ஆஜர் எதிரி பெயர் சஞ்சய் ஆகும். ) எதிரியை காவல் துறையினர் எங்கு வைத்து கைது செய்தார்கள் என்றால் ஆறுமுக மங்களம் பிள்ளையார் கோவிலில் வைத்து கைது செய்தார்கள்.

6.எ திரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்ன ரூ. 80000 எந்த வகையான ரூபாய் தாள்கள் என்றால் நான் அந்த பணத்தை பார்க்கவில்லை. நான் ஒப்புதல் வாக்குமூலத்திலும் அத்தாட்சியிலும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் ஆறுமுகமங்களத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.

7. நான் கையெழுத்து போடும் போது ஏரல் காவல் ஆய்வாளர், தலையாரி தவிர பொது மக்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு அதிகாரி என்பதால் அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நான் எதிரியை பார்க்காமல் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.